Lotus Eye Hospital And Institute Limited

CIN No. : L85110TZ1997PLC007783

770/12, Avinashi Road, Civil Aerodrome Post, Coimbatore - 641 014.

Tel : 0422 - 4229900, 4229999

R.S.PURAM
155B, East Periasamy Road, Near Chinthamani,
North Coimbatore, R.S.Puram, Coimbatore - 641 002.
Ph : 0422 - 4239900, 4239999

SARAVANAMPATTI
86/1, Site No.2, TRM Avenue, Sathy Road,
Saravanampatti, Coimbatore - 641 035.
Ph : 0422 - 2210021

E-mail : info@lotuseye.org Website : www.lotuseye.org

December 19 2025

BSE Limited Phiroze Jeejeebhoy Towers Dalal Street Mumbai- 400001 Scrip Code: 532998	**National Stock Exchange of India Limited 5th Floor, Exchange Plaza Bandra (East) Mumbai – 400 051 Scrip Code: LOTUSEYE**

Dear Sir/Madam,

Sub: Notice to Shareholders

Pursuant to Regulation 47(1)(d) of SEBI LODR 2015 Please find enclosed herewith the copy of Newspaper Advertisement published on December 19th 2025 in The Tamil Hindu (Coimbatore Edition) and Business Standard (All India Edition) with respect to the postal ballot notice and remote e-voting process.

Request you to kindly take the same on your record

Thanking You

Yours Faithfully

For Lotus Eye Hospital and Institute Limited

ACHUTH MENON MOHANMENON

Digitally signed by ACHUTH MENON MOHANMENON
Date: 2025.12.19 12:33:30 +05'30'

M Achuth menon
Company Secretary & Compliance Officer
Membership no - A63980

திருப்பூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் தேசிய கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ் வரும் 29-ம் தேதி முதல் ஜனவரி 28-ம் தேதி வரை அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட உள்ளது.

'காசியில் வாசி, அவிநாசி' என்ற பழமொழி வெள்ளைத் தம்பிரானால் வந்தது. இவரது மடம் தான், அவிநாசி லிங்கேஸ்வரர் கோயில் நுழைவு மண்டபம் மேற்கில் உள்ள கரிவரதராஜ பெருமாள் கோயிலாக மாறியது.

ஊட்டியில் போக்குவரத்து நெரிசலுக்கு ஏஐ மூலம் தீர்வு காண முயற்சி

ஊட்டி

சர்வதேச சுற்றுலா தலமான நீலகிரி மாவட்டத்துக்கு ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். சீசன் காலங்களில் கட்டுக்கடங்காத மக்கள் குவிவதால், கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

மலைப்பகுதியில் கூட்டம் குவிவதை தடுக்கவும், போக்குவரத்தை முறைப்படுத்தவும் இ-பாஸ் நடைமுறையை சென்னை உயர் நீதிமன்றம் கொண்டு வந்தது. தற்போது ஊட்டியில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க செயற்கை நுண்ணறிவு உதவியுடன், புதிய முயற்சியை காவல்துறை மேற்கொண்டுள்ளது.

மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சக நிதியுதவியின் கீழ் ஊட்டியில் உள்ள லேம்ஸ் ஆட்டோமேஷன் நிறுவனத்துடன் இணைந்து இந்த முயற்சியை நீலகிரி காவல் துறை மேற்கொண்டுள்ளது. இதன் தொடக்க விழா ஊட்டியில் உள்ள காவல்கண்காணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. லேம்ஸ் ஆட்டோமேஷன் நிறுவன ஆய்வாளர் ரோஷன் வரவேற்றார். திட்டம் குறித்து நிறுவன இயக்குநர் எம்.ஆனந்த் விளக்கினார்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா திட்டத்தை தொடங்கிவைத்துபேசியதாவது: நீலகிரி மாவட்டத்தில் போக்குவரத்து பிரச்சினைகளை தீர்க்க காவல்துறை பல்வேறு புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக பி.டெக் கல்லூரி மாணவர்களை கொண்டு, செயற்கை நுண்ணறிவு உதவியுடன் போக்குவரத்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இந்த மாணவர்கள் பல குழுக்களாக பிரிந்து, ஸ்மார்ட் பார்க்கிங், க்யூஆர் கோடு மூலம் வாகன நிறுத்துமிடங்களை அறிவது, போக்குவரத்து இல்லாத சாலைகளை கண்டறிவது, வாகனங்களின் எண்ணை அறிவது ஆகியவற்றை ஆய்வு செய்வார்கள். அவர்கள் தரும் தரவுகளின் அடிப்படையில் போக்குவரத்து பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும், என்றார். போக்குவரத்து காவல் ஆய்வாளர் குருசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

ஊட்டியில் போக்குவரத்து நெரிசலை ஏஐ உதவியுடன் தீர்வு காண்பதற்கான திட்டத்தை தொடங்கி வைத்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா. படம்: ஆர்.டி.சிவசங்கர்

வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்

திருப்பூர்

நீதிமன்றங்களில் 'இ-பைலிங்' முறையை ரத்து செய்து பழைய நடைமுறையை அமல்படுத்த வலியுறுத்தி, திருப்பூர் மாவட்ட அனைத்து வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் நீதிமன்ற பணியை புறக்கணித்து வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருப்பூர் அட்வகேட் அசோசியேஷன் தலைவர் ராமசாமி தலைமை வகித்தார். போதிய தொழில்நுட்ப வசதி, பயிற்சி மற்றும் உள்கட்டமைப்பு இல்லாததால் நீதிமன்றங்களில் மின்னணு வழக்கு தாக்கல் என்பது நடைமுறைச் சிக்கல்களை உருவாக்கும், இது வழக்கறிஞர்களுக்கும், மக்களுக்கும் நிதிச் சுமையையும்,மன உளைச்சலையும் ஏற்படுத்தும் எனவும், இ-பைலிங் நடைமுறையை திரும்பப் பெற வேண்டும் எனவும் வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பினர். மாவட்ட வழக்கறிஞர்கள் சங்க தலைவர் உதயசூரியன், செயலாளர் விஜய் ஆனந்த் உட்பட பலர் பங்கேற்றனர்.

திருப்பூரில் குப்பை பிரச்சினைக்கு தீர்வு காண கோரிக்கை

திருப்பூர்

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கை:

திருப்பூர் மாநகரில் நிலவும் குப்பை பிரச்சினைக்கு தீர்வு காண அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். திருப்பூரில் காலங்காலமாக நிலவும் குப்பை பிரச்சினையால் அனைத்து தரப்பினரும் பாதிக்கப்படுகிறார்கள். நொய்யல் ஆற்றின் இருபுறத்திலும் குப்பை மலைபோல் குவிந்துள்ளது.

மாநகராட்சி குப்பையை சின்னக்காளிபாளையத்தில் கொட்டுவதற்கு கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டவர்களை போலீஸார் கைது செய்துள்ளனர். குப்பை கொட்டும் விவகாரத்தில் உறுதியான மாற்றுத்திட்டத்தை தமிழ்நாடு அரசிடம் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள அறிக்கை: திருப்பூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிக்கு மாறாக குப்பையை தரம் பிரிக்க பொதுவெளியில் கொட்டியதற்காக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் மற்றும் தேசிய பசுமைத்தீர்ப்பாயம் ஆகியவற்றால் ஏறக்குறைய ரூ.3.14 கோடி அபராதம் விதிக்கப்பட்டது. இதற்கு பிறகும் திருப்பூர் மாநகராட்சி நிர்வாகத்தின் பொறுப்பற்ற செயல்பாடு கண்டனத்துக்குரியது.

முதலிபாளையம், காளம்பாளையம், சிறுபூலுவபட்டி, நெருப்பெரிச்சல் ஆகிய பகுதிகளில் கைவிடப்பட்ட குவாரிகளில் கொட்டப்பட்ட குப்பையை அகற்றாமல், தற்போது இடுவாயில் புதிய குப்பை கிடங்கு அமைப்பது பொறுப்பற்ற நிர்வாகமாகும். கிராமங்களை குப்பைத்தொட்டியாக மாற்றும் பணியை திமுக செய்து வருகிறது. இடுவாய் கிராமத்தில் குப்பைகிடங்கு அமைக்கும் பணியை தடுக்கும் திமுக அரசு உடனடியாக கைவிடுவதுடன், கிடங்கு அமைவதை எதிர்த்து போராடும் மக்கள் மீது ஏவப்படும் அடக்குமுறை நடவடிக்கையை நிறுத்திக் கொள்ள வேண்டும், என கூறப்பட்டுள்ளது.

சிறுபான்மையினர் உரிமைகள் தின விழாவில்

ரூ.10.15 லட்சத்தில் 87 பேருக்கு நலத்திட்டங்கள்

ஊட்டி

நீலகிரி ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் சிறுபான்மையினர் உரிமைகள் தின விழா நேற்று நடந்தது.

அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் தலைமை வகித்து, மொத்தம் 87 பயனாளிகளுக்கு ரூ.10.15 லட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது: நீலகிரி மாவட்டத்தில் 535 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு தனியாக நலவாரிய அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

60 வயதுக்கு மேற்பட்ட 30 உறுப்பினர்களுக்கு கடந்த ஓராண்டாக ரூ.1,200 ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவ தேவாலயங்களில் பணிபுரிந்து வரும் உபதேசியார்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு தனியாக நலவாரியம் அமைக்கப்பட்டு, தற்போது வரை 250 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், 2025-2026-ம் ஆண்டில் 83 பயனாளிகளுக்கு ரூ.4.15 லட்சம் மதிப்பில் இலவச தையல் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

முஸ்லீம் மகளிர் உதவும் சங்கம் மூலம் 2008-ம் ஆண்டு முதல் திரட்டப்பட்ட நன்கொடை தொகை மற்றும் இணை மானிய தொகை சேர்த்து ஒருமித்த தொகையில் நாளது வரை 1,078 பயனாளிகளுக்கு ரூ.1.30 கோடியும், கிறிஸ்தவ மகளிர் உதவும் சங்கம் மூலம் இணை மானிய தொகை சேர்த்து ஒருமித்த தொகையில் 401 பயனாளிகளுக்கு ரூ.72 லட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தில் பின் தங்கிய சிறுபான்மையின மக்கள் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக டாம்கோ நிறுவனம் மூலம் தனிநபர் கடன், குழுக்கடன், கல்விக்கடன் ஆகிய பல்வேறு கடனுதவிகளும் வழங்கப்படுகின்றன, என்றார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா, ஊட்டி சட்டப்பேரவைத்தொகுதி உறுப்பினர் ஆர்.கணேஷ், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் (பொ) லோகநாயகி, மாவட்ட தலைமை காஜி முஜிபுர் ரகுமான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஊட்டியில் நடந்த விழாவில், பயனாளிக்கு நலத்திட்ட உதவி வழங்கிய அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன். படம்: ஆர்.டி.சிவசங்கர்

கஞ்சா கடத்திய வழக்கில் பெண் உட்பட மூவருக்கு தலா 20 ஆண்டு சிறை

கோவை

கோவை சூலூர் போலீஸார், 1-12-2016 அன்று பட்டணம் பிரிவு அருகே வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, இருசக்கர வாகனத்தில் 4 கிலோ கஞ்சா கடத்தி வந்த கவுண்டம்பாளையத்தைச் சேர்ந்த தேன்மொழி(35) என்பவரை கைது செய்தனர்.

பட்டணம் மணிகண்டன் நகரில் உள்ள குடோனில் போலீஸார் சோதனை நடத்தி 600 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்து, அவரது கணவர் ரவியையும் கைது செய்தனர். தப்பியோடிய மதுரை உசிலம்பட்டியைச் சேர்ந்த சிவா(33), கவுண்டம்பாளையம் அசோக்நகரைச் சேர்ந்த ஜெயபால்(34) ஆகியோர் மீதும் வழக்குப்பதிந்தனர். பின்னர், இவ்வழக்கை விசாரித்த கோவை போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவு போலீஸார், தென்னம்பாளையம் குமார்(37) என்பவரையும் இவ்வழக்கில் சேர்த்தனர்.

கோவை போதைப்பொருள் தடுப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்த விசாரணை முடிந்து நேற்று நீதிபதி ராஜலிங்கம் தீர்ப்பு கூறினார். வழக்கு விசாரணையின் போது ரவி உயிரிழந்தார். கஞ்சா கடத்தியது, வாகனம் மூலம் கடத்தியது, கஞ்சா விற்றது ஆகிய 3 குற்றங்களுக்காக தேன்மொழிக்கு தலா 20 ஆண்டுகளும், தலா ரூ.1.50 லட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது. சிவா மற்றும் ஜெயபாலுக்கு கஞ்சா வைத்திருந்தது மற்றும் விற்றதற்கு தலா 20 ஆண்டுகளும், ஒவ்வொரு குற்றத்துக்கும் தலா ரூ.50 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது. குமாருக்கு கஞ்சா வைத்திருந்தது, கஞ்சா கடத்த வாகனத்தை உபயோகப்படுத்தியது, கூட்டாக கஞ்சா கடத்தியது ஆகிய குற்றங்களுக்காக தனித்தனியாக 5 ஆண்டுகள் சிறை தண்டனையும், ஒவ்வொரு குற்றத்துக்கும் தலா ரூ.25 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது. இந்த தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

மற்றொரு வழக்கு

கடந்த 3.12.2016 அன்று சூலூர் போலீஸார், நீலாம்பூரில் வாகனத்தணிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, 42 கிலோ கஞ்சா கடத்திய சிவா(33), ஜெயபால் (34) ஆகியோரை கைது செய்தனர். பின்னர், கோவை போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு போலீஸார் இவ்வழக்கை விசாரித்தனர்.

இவ்வழக்கில், கஞ்சா கடத்திய குற்றத்துக்கு சிவா, ஜெயபால் ஆகிய இருவருக்கும் தலா 12 ஆண்டுகள் சிறை தண்டனை, தலா ரூ.1 லட்சம் அபராதமும், வாகனத்தை பயன்படுத்தியதற்காக ஜெயபாலுக்கு மேலும் 12 ஆண்டுகள் சிறை, ரூ.3 லட்சம் அபராதமும், சிவாவுக்கு ரூ.2 லட்சம் அபராதமும் விதித்து நீதிபதி ராஜலிங்கம் உத்தரவிட்டார்.

தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்கவும் உத்தரவிடப்பட்டது. மேற்கண்ட இரு வழக்கிலும் அரசு தரப்பில் சிறப்பு வழக்கறிஞர் வெ.சிவகுமார் ஆஜரானார்.

தனியார் வேலைவாய்ப்பு முகாம் தள்ளிவைப்பு

திருப்பூர்

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் மனிஷ் நாரணவரே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

திருப்பூர் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், மகளிர் திட்ட அலுவலகம் ஆகியன இணைந்து தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை வரும் 27-ம் தேதி திருப்பூர் எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரியில் நடத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. நிர்வாகக் காரணங்களால் இம்முகாம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. தனியார் வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ள தேதி மற்றும் இடம் பின்னர் அறிவிக்கப்படும், என கூறப்பட்டுள்ளது.

முதல்வருக்கு எதிராக டிச.29-ல் கருப்புக்கொடி போராட்டம் அண்ணாமலை தகவல்

திருப்பூர்

திருப்பூரில் நிலவும் குப்பை பிரச்சினைக்கு தீர்வு காணக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை நேற்று கைது செய்யப்பட்டு, மாலையில் விடுவிக்கப்பட்டார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "வரும் 29-ம் தேதி திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் நடைபெற உள்ள திமுக மேற்கு மண்டல மகளிர் அணி மாநாட்டுக்கு வருகை தரவுள்ள தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எதிராக கருப்புக்கொடி காட்டி போராட்டத்தில் ஈடுபட உள்ளோம். இதில் கிராம மக்கள் பங்கேற்று தங்கள் எதிர்ப்பை வலுவாக பதிவு செய்வார்கள்" என்றார்.

கோவை செல்வபுரத்தில் அமைந்துள்ள இரு பள்ளிவாசல்களின் விரிவாக்க கட்டுமானப் பணிகளுக்காக, கோவை வடக்கு மாவட்ட திமுக சார்பில், முதல் தவணை நிதியை மாவட்ட செயலாளர் தொ.அ.ரவி நேற்று வழங்கினார்.

எந்த தொகுதியில் போட்டி? வானதி சீனிவாசன் பதில்

கோவை

பாஜக தமிழக மகளிர் அணி சார்பில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகளுக்கான 2 நாள் பயிற்சி முகாம் கோவை எட்டிமடையில் நேற்று தொடங்கியது. பாஜக தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன் எம்எல்ஏ, பயிற்சி முகாமை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நான் எந்த தொகுதியில் போட்டியிடுவேன் என்ற தகவல் டெல்லியில் இருந்து தான் தெரிவிக்கப்படும். விஜய்க்கு செங்கோட்டையன் பட்டம் வழங்கியுள்ளார். கொடுப்பவர் யார், பெறுபவர் யார் என்பதில்தான் அதன் தகுதி உள்ளது. எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது அரசியல் செய்யாமல், அவியலா செய்வேன் என கேட்ட ஸ்டாலின், முதல்வரான பின் எதிர்க்கட்சியா, எதிரிகட்சியா என கேட்கிறார். தமிழக அரசு குறித்து விமர்சனம் செய்பவர்களை கைது செய்வது, சிறையில் அடைப்பது போன்ற நடவடிக்கைகள் தொடர்கின்றன. முதல்வர் யாரைப்பார்த்தாலும் எதிரியாக பார்க்கக்கூடிய மனநிலைக்கு வந்து விட்டார், என்றார்.

Q3 sales, easing costs bode well for Godrej Consumer

GCPL stock trading at 44x its FY27 earnings per share

RAM PRASAD SAHU
Mumbai, 18 December

The stock of Godrej Consumer Products (GCPL) is trading at its monthly highs, rising 2.5 per cent over the past month while its sectoral index is down 2 per cent over the same period. The monthly gain reverses its underperformance over the past three months.

There are expectations that the third quarter (Q3FY26) will see an improvement in its operating performance which was sub-par over the last couple of quarters due to raw material pressures and Indonesia performance.

While the Indonesian operations will take time to recover, brokerages expect the India revenues and margins to recover from the December quarter. At the current price, the GCPL stock is trading at 44 times its FY27 earnings per share. The positive trigger for the stock is the recovery in India business growth and margin from the December quarter (Q3FY26).

The India business saw a sales impact of up to 4 per cent in Q2FY26 on the back of destocking and pricing disruptions especially in soaps (volume and value impact) and hair colour due to cuts in Goods and Sales Tax or GST. Emkay Research points out that GST cuts have boosted consumer sentiment, and growth benefits are likely to be visible going ahead.

Further, the management expects price stability in palm oil, though it mentioned that the long-term trend is difficult to predict.

Gross margins in the past couple quarters were down due to sharp palm oil inflation. On the back of multiple cost initiatives, the company remains confident of a recovery in India business margin to 24-26 per cent, a normative band, from H2FY26.

Meanwhile, soap volumes would see recovery as the price action is already in the base. The revenue growth for the India business in H2FY26 is expected to be in high single digits to double digits, with volume growth in the high single-digit to low double-digit range. Analysts led by Naveen Trivedi of Motilal Oswal Research points out that macro demand recovery is steadily improving, and GCPL has been aggressively focusing on new growth levers, distribution reach opportunities in rural markets, and market expansion.

Ahead of benchmark



Sources: Bloomberg, NSE

Volume for categories excluding soaps have been in double digits. While growth in the June quarter came in at mid-teens, it was in double digits in Q2FY26 reflecting the robust demand for these categories.

In household insecticides, the company's mosquito repellent molecule Renofluthrin is driving growth across formats and has helped it increase market share. While Fabric Care (Ezee and Genteel) continues to post robust growth, the liquid laundry detergent Godrej Fab is driving market share gains. There could, however, be a near term growth headwind in the Indonesian market.

While the company reported a 14 per cent revenue growth in this market in FY25, there could be a sales decline in FY26 due to higher competition. There could be a mid-single digit growth in FY27 driven by volumes. Margins in the Indonesian business are likely to improve from 22 per cent now to 24 per cent over the medium term. The Africa business could register a high teen growth in Q3 on the back of a low base while Q4 growth is expected in single digits.

Motilal Oswal Research has marginally increased its earnings per share estimates by 2 per cent for FY27 and 1 per cent in FY28. The brokerage expects the company to deliver an annual growth of 11 per cent in sales and 18 per cent in net profit over FY28. The brokerage, which has a buy rating, expects the stock to witness a rerating in the valuation multiple given the improved earnings outlook.

Nitin Gupta and Mohit Dodeja of Emkay Research believe that as revenue growth is enhanced, margin recovery will aid healthy earnings delivery. GST rate reduction is also likely to drive consumption in FMCG, they add. The brokerage has a buy rating on the company.

YOUR MONEY

HOME LOAN BALANCE TRANSFER

Higher residual principal and tenure deliver greater savings

KARTHIK JEROME

The Reserve Bank of India cut the repo rate by 25 basis points on December 5. The cumulative rate cut of 125 basis points in 2025 has brought the repo rate down to 5.25 per cent. Queries for home loan balance transfer (HLBT) have spiked after the latest cut.

Conducive environment

Lower interest rates typically benefit new borrowers faster than existing ones. "Many existing borrowers are still waiting for a full transfer of benefits from their lenders," says Atul Monga, chief executive officer (CEO) and cofounder, BASIC Home Loan.

Balance transfer becomes attractive when rates are competitive and trending lower. "Interest rate reductions make lenders' pricing, processing fees, and service quality more competitive," says Pramod Kathuria, founder and CEO, Easiloan.

Long residual tenure, high credit score helps

Many borrowers whose loans are linked to older or internal benchmarks are stuck at higher home loan rates than the best rates they can get today. "Borrowers who took out a loan during a high-interest-rate period and whose existing lender is slow to pass on the benefits of rate cuts should consider a balance transfer," says Monga.

Those with a long repayment tenure ahead are best placed to benefit. Borrowers should ideally have five to seven years remaining in the loan tenure. "The higher the outstanding loan principal, the greater the absolute saving possible even from small reductions in rates," says Kathuria.

Credit quality is another factor. Kathuria says borrowers should have a credit score above 750. This improves their chances of securing a better rate from a new lender.

Calculate net savings

The decision to go for HBLT should be based on overall savings. "Borrowers must base this decision on total savings over the remaining loan tenure, rather than just the headline rate," says Monga. He adds that even a 25 basis point reduction can be meaningful for long-tenure or high-interest-rate loans.

Kathuria advises borrowers to factor in all associated costs. "Compute net savings after accounting for processing fees, legal and valuation charges, and any foreclosure-related costs," he says.

Eligibility checks, documents required

Lenders assess eligibility based on income and repayment capacity. "Monthly income and EMI-to-NMI (net monthly income) ratio are assessed," says Ratan Chaudhary, head of home loans, Paisabazaar.

Repayment behaviour over the past 12 months is examined. "The new lender will examine whether home loan EMIs were paid on time," says Rishi Mehra, CEO, Wishfin.

Credit score checks, property-related documents and know your customer (KYC) compliance are mandatory. "The lender verifies whether the property title is clear and legally transferable," says Chaudhary. A no-objection certificate from the previous bank and builder may also have to be submitted.

Key steps in balance transfer

- Verify your credit score
- Compare lenders on rate, spread, and reset clauses
- Apply with income documents, KYC, and property records
- New lender conducts valuation and legal due diligence
- Sanction letter is issued
- Existing loan is foreclosed and documents transferred
- New loan is disbursed and closure of old loan confirmed

Source: Easiloan

Costs involved

The new lender charges a processing fee, usually between 0.5 per cent and 2 per cent of the loan amount. Borrowers on floating-rate loans are not required to pay foreclosure charges, while fixed-rate loans attract such costs. Legal and technical valuation fees may apply, along with stamp duty on fresh loan documents. "Some lenders may reduce or waive the processing fee or other charges to attract borrowers," says Chaudhary.

Dos and don'ts

Do not make this transition without calculating the net effective cost savings. "Use online HLBT calculators to compare potential savings from various lenders," says Chaudhary.

The loan tenure should not be extended during HLBT. "Borrowers should not reset to a longer tenure as doing so leads to higher interest outgo," says Mehra.

Due diligence on the new lender is essential. "Check how the new lender transmits repo rate changes by the RBI and the date of EMI deduction," says Mehra. It should ideally be after the date on which the borrower's salary is credited.

Borrowers may also negotiate with their existing lender. "Take an offer from a new lender and use it to negotiate with your existing lender," says Mehra. While the existing lender may charge a fee for moving you to a lower rate, this will likely be lower than the cost of HLBT.

Family floater vs individual health plan: What works best for your family

Indian families often grapple with a dilemma while taking health insurance. Which plan is better: Individual or family floater.

Age and health profile should guide the decision

"Family floater policies work best for growing families in the younger age group, as they are economical while giving adequate protection from unforeseen hospitalisations," says Arti Mulik, chief technical officer, Universal Sompo General Insurance.

Milind Tayde, head of employee benefits at Anand Rathi Insurance Brokers, adds: "As parents enter their late 30s and 40s, frequent or high-value claims by one person can repeatedly impact shared coverage. Shifting to individual policies for adults while retaining children under a floater ensures better risk separation." Siddharth Singhal, business head of health insurance, Policybazaar.com, points out that young families in their late 20s and 30s can safeguard 3-4 people under a single floater premium, but "people in their 40s and 50s must choose individual plans to avoid exhausting the family pool due to chronic conditions." Rakesh Kumar, founder and managing director of Square Insurance, echoes this. "Individual plans work better when family members are at different life stages, because everyone gets coverage suited to their own needs."

Read full report here: mybs.in/2esR83H

COMPILED BY AMIT KUMAR